தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

விளம்பி, ஆனி 14, திருவள்ளுவர் ஆண்டு 2049

2018 ஜூன் 28, வியாழக்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"வாரி பெருக்கி வளம்படுத்து உற்றவை
ஆராய்வான் செய்க வினை."

பொருள் வரும் வழிகளைப் பெருக்கி, வளம் உண்டாகும்படி மேலும் வளர்த்து, இடையில் ஏற்படும் தடைகளை ஆராய்ந்து நீக்குபவரே தொழில்புரியத் தக்கவர்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்—விடைகள். வினா வரிசை எண் 231, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.பெ. கிரி, மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

231—

பள்ளிக்குப் புதிய கட்டடம்

***8094—திரு. மு.பெ. கிரி:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கம் தொகுதி, குப்பனத்தம் ஊராட்சியிலுள்ள உயர்நிலைப் பள்ளிக்குப் புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2018 ஜூன் 28

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்தக் கேள்வியை அவையில் கேட்பதற்கு முன்பாகவே, செங்கம் தொகுதி, குப்பனத்தம் அரசு உயர்நிலைப் பள்ளிக்கு நபார்டுமூலம் கட்டடம் கட்டும் பணிகளைத் துவங்கி, சாதனை படைக்கின்ற சரித்திர அரசாக இந்த அரசு விளங்கிக் கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கிரி, அதற்கு நன்றி சொல்லிவிட்டு உட்கார்ந்துவிடுங்கள். இன்னொரு கேள்வி கேட்க வேண்டாம்.*

திரு. மு.பெ. கிரி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், கேள்வி கேட்பதற்கு முன்பாகவே கட்டடம் கட்டும் பணிகள் நடைபெற்று வருவதாகச் சொன்னார்கள். நான் இந்தக் கேள்வியைக் கேட்டு 2 ஆண்டுகள் முடிந்து, 3 ஆம் ஆண்டு தொடங்கியிருக்கிறது. ஆனால், இப்போது பள்ளிக்குப் புதிய கட்டடம் கட்டுகிறார்கள்; மகிழ்ச்சி.*

அதேநேரத்தில், இந்த மாமன்றத்தில் நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். தமிழ்நாட்டிலுள்ள 32 வருவாய் மாவட்டங்களிலே திருவண்ணாமலை மாவட்டம் கல்வியிலே பின்தங்கியிருக்கிறது. குறிப்பாக, திருவண்ணாமலை மாவட்டத்திலிருக்கிற 18 ஊராட்சி ஒன்றியங்களில், செங்கம் ஊராட்சி ஒன்றியம் என்பது ஜவ்வாது மலைக்கு அடுத்து கல்வி அறிவிலே பின்தங்கியிருக்கின்ற ஒன்றியமாகும். எனவே, அந்தப் பகுதியிலே இருக்கின்ற அனைத்துப் பள்ளிகளுக்கும் உட்கட்டமைப்பு வசதிகளோடுகூடிய கட்டடங்களைக் கட்டித் தர வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய உணர்வுகளை மனதிலே கொண்டுதான்,*

திருவண்ணாமலை மாவட்டத்தைப் பொறுத்தவரையில், 13 உயர்நிலைப் பள்ளிகளிலும், 14 மேல்நிலைப் பள்ளிகளிலும் நபார்டு மூலமாக இந்த ஆண்டு பணிகள் துவங்கப்பட்டு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆகவே, திருவண்ணாமலை மாவட்டத்திற்கு இந்த அரசு தனிக் கவனம் செலுத்தி, பணிகளை மேற்கொண்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.பெ. கிரி அவர்கள்.

திரு. மு.பெ. கிரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதியை ஒரு நிறுவனம் ஆய்வு செய்து, கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு பெண் பிள்ளைகளின் கல்வி சதவிகிதம் குறைந்திருக்கிறது என்ற தகவலை எனக்குத் தெரிவித்திருக்கின்றது. செங்கம் நகரத்தில், ஆண்கள் மேல்நிலைப் பள்ளியும், பெண்கள் மேல்நிலைப் பள்ளியும் இருக்கின்றன. அதில் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் 1,274 மாணவிகள் கடந்த ஆண்டு படித்தார்கள். அங்கு 9 ஆம் வகுப்பு, 10 ஆம் வகுப்பு, 11 ஆம் வகுப்பு, 12 ஆம் வகுப்புகளில் 1,000–க்கும் மேற்பட்ட மாணவிகள் படிக்கின்றார்கள். ‘அங்கு போதுமான கழிப்பறை வசதி இல்லை’ என்று நான் ஏற்கெனவே இந்த மாமன்றத்தில் கூறினேன். அதற்கு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், “தமிழ்நாடு முழுவதும் 10,000 கழிப்பறைகள் கட்டித் தரப்படும்” என்று சொன்னார்கள். ஆனால், அந்தப் பள்ளியை நேரடியாகச் சென்று பார்த்தால், எந்தவித உட்கட்டமைப்பு வசதியும் இல்லை என்பது தெரியவரும். காரணம், அரசு அனுமதியோடு கட்டப்பட்ட கட்டடம் என்று பார்த்தால், அங்கு பொதுப் பணித் துறையால் கட்டப்பட்ட ஒரேயொரு கட்டடம்தான் இருக்கிறது. மற்ற கட்டடங்களெல்லாம், பொதுப் பணித் துறை வரையறுத்துள்ள அளவுகோலில் இல்லாமல், நெருக்கடியாகக் கட்டப்பட்டிருக்கின்றன. அதுபோன்று நெருக்கடியாக உள்ள கட்டடத்தையும் இடித்துவிட்டு, புதியதாகக் கட்டடம் கட்டித் தர வேண்டுமென்று பொதுப் பணித் துறை அலுவலகத்திலே கேட்டிருக்கிறேன். எனவே, அதற்கும் புதிய கட்டடம் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், அங்குள்ள ஆண்கள் மேல்நிலைப் பள்ளிக்குக் கட்டடமே இல்லை. தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியில்தான் ஒரேயொரு கட்டடம் கட்டப்பட்டது. 1970 ஆம் ஆண்டு கட்டப்பட்டதற்குப் பிறகு கட்டடம் கட்டப்படவில்லை. அந்த ஒரேயொரு கட்டடம் மட்டும்தான் கட்டப்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்ல; பின்தங்கிய பகுதி என்பதாலும், பெண் பிள்ளைகளின் கல்வி சதவிகிதம் குறைந்திருப்பதாலும், அங்குள்ள பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக, மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தித் தர வேண்டுமென்று நான் ஏற்கெனவே பலமுறை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கோரிக்கை வைத்திருக்கின்றேன். குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், நானே 5 ஆம் வகுப்பு வரை எனது சொந்தக் கிராமத்தில்தான் படித்தேன். 6 ஆம் வகுப்புதான் திருவண்ணாமலையில் படித்தேன். எனவே, எனது கிராமத்திலுள்ள நான் படித்த பள்ளியைத் தரம் உயர்த்திட வேண்டும். அந்தப் பள்ளிக்கு 30–1–2015 அன்றே பணம் கட்டிவிட்டோம்; 4 ஏக்கர் 99 சென்ட் நிலமும் இருக்கிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், தனிக் கவனம் செலுத்தி அதனைத் தரம் உயர்த்திடவும், மேலும் எங்கள் பகுதியிலே இருக்கின்ற மாணவிகளின் கல்வித் தரம் உயரவும்; அவர்கள் கல்வியறிவு பெறவும், எங்கள் மாவட்டத்திலிருக்கின்ற, எங்கள் ஒன்றியத்திலிருக்கின்ற, எங்கள் தொகுதியிலிருக்கின்ற அனைத்துப் பள்ளிகளையும் தரமுயர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஒரு தாய் அனைத்துக் குழந்தைகளையும் சமமாகத்தான் பார்ப்பார். எனினும், எந்தப் பிள்ளை கொஞ்சம் சத்து குறைவாக இருக்கிறதோ, அந்தப் பிள்ளைக்கு அதிக ஊக்கம் கொடுப்பார்கள். அதுபோன்று எல்லோரையும் சமமாக நடத்தாமல், இந்த ஆண்டு அறிவிக்கப்படவிருக்கின்ற உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளைக் கணக்கில்கொள்ளாமல், செங்கம் சட்டமன்றத் தொகுதியிலே உள்ள பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக, மேல்நிலைப் பள்ளிகளாக கூடுதலாக தரம் உயர்த்தித் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

2018 ஜூன் 28]

முற்பகல் 10–05

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு கேள்வி கேட்பார் என்று நினைத்தேன்; 5 கேள்விகள் கேட்டிருக்கிறார்கள். அதில் ஒன்று, பெண்கள் மேல்நிலைப் பள்ளியிலே கழிப்பிட வசதிகள் இல்லை என்று சொன்னார்கள். இப்போது அரசால் சில முடிவுகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. அந்த வகையில், அம்மா அவர்களுடைய அரசைப் பொறுத்தவரையிலும், கழிப்பிட வசதிகளோடு, ஆய்வகங்கள் உள்ளிட்ட அனைத்து கட்டடங்களையும் கட்டித் தருகின்ற திட்டத்தை தற்போது இந்த அரசு நிறைவேற்றி வருகிறது. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி அவர்கள்கூட, இப்போது கழிப்பிடங்களை கூடுதலாகக் கட்டித் தருகிறார்கள்; அதுவும், மேல் மாடியிலும், கீழ் மாடியிலும் இப்போது நவீனமாகக் கட்டித் தரப்படுகிறதென்று என்னிடத்திலே சொன்னார்கள். ஒரே இடத்தில் அதைக் கட்டித் தந்தால்கூட நன்றாக இருக்குமென்று குறிப்பிட்டார்கள். ஆகவே, இதைப் பொறுத்தவரையிலும், அரசு உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருக்கிறது. 4 நாட்களுக்கு முன்பாக நீங்கள் பார்த்திருக்கக்கூடும். அனைத்து ஆசிரியர்களுக்கும் சுற்றறிக்கை அனுப்பப்பட்டிருக்கிறது. எந்தெந்தப் பள்ளிகளில் கழிப்பிட வசதி இல்லையோ, அங்கெல்லாம் அவற்றை உடனடியாக அமைப்பதற்கும், சீரமைப்பதற்கும், பெற்றோர்–ஆசிரியர் சங்கத்தோடு கலந்து பேசி, உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்றும், அரசு நிதி இருக்குமேயானால், சம்பந்தப்பட்ட ஒன்றியத்தின் மூலமாக அந்தப் பணிகளை மேற்கொள்ள வேண்டுமென்றும் ஆசிரியர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. எந்தெந்தத் திட்டங்களின் மூலமாக அதை நிறைவேற்ற வேண்டுமோ, அதைச் செய்வதற்கும் அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் கட்டட வசதி வேண்டுமென்றும், அங்கே இருக்கின்ற நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வேண்டுமென்றும் கேட்டிருக்கிறார். அதையும் இந்த அரசு உடனடியாக கனிவோடு கவனிக்கும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். கணேஷ் அவர்கள்.*

[2018 ஜூன் 28

திரு. ஆர். கணேஷ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதிக்குட்பட்ட எமரால்டு மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதியிலே, கிட்டத்தட்ட 21 காலனிகள் இருக்கின்றன. அதிக அளவிலான மாணவர்கள் தொலைதூரம், அதாவது, சுமார் 8 கிலோ மீட்டர், 9 கிலோ மீட்டர் தூரம் பயணம் செய்து மேல்நிலைப் பள்ளிக்குச் செல்ல வேண்டிய நிலை இருக்கிறது. எனவே, எமரால்டு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த தாங்கள் ஆவன செய்ய வேண்டும். கடந்த ஆண்டு கூடலூருக்குக் கொடுத்துவிட்டீர்கள். இந்த ஆண்டு எனது தொகுதிக்கு நிச்சயமாகக் கொடுத்து, அந்த ஏழை மக்களுடைய கனவை நனவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நமது மரியாதைக்குரிய மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர் அவர்களிடம், அந்த இடத்தில் ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் வேண்டுமென்று கேட்டேன். அதற்கு அடிக்கல் நாட்டும் அளவுக்கு நேற்று சர்வே பணிகள் எல்லாம் முடிந்துவிட்டன. அதற்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, அங்குள்ள ஏழை மாணவர்களின் நலன் கருதி, இதற்கு ஆவன செய்ய வேண்டுமாறு கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே உதகமண்டலம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டவாறு, அந்தப் பள்ளி இந்த ஆண்டு தரமுயர்த்தித் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. இராதாமணி அவர்கள்.*

திரு. கு. இராதாமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது விக்கிரவாண்டி தொகுதியில் மேல்காரணை ஊராட்சியில் ஓர் அரசு உயர்நிலைப் பள்ளி உள்ளது. அதை அரசு மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவதற்கான கருத்துரு* CEO *அலுவலகத்திலிருந்து மாண்புமிகு அமைச்சரின் பார்வைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அதற்கான பணமும் செலுத்தப்பட்டுவிட்டது. தற்போது தரம் உயர்த்தப்படுகிற பள்ளிகளின் பட்டியலில் அந்தப் பள்ளியும் இடம்பெறுமா என்பதைத் தங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

2018 ஜூன் 28]

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கருணையோடு, 100 பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக தரமுயர்த்துவதற்கும், 100 பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக தரமுயர்த்துவதற்கும் இந்த அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற பகுதியில் விதிமுறைகளுக்குட்பட்டு அப்பள்ளி இருக்குமேயானால், அங்கே மாணவர்களுடைய எண்ணிக்கை குறிப்பிடும் அளவுக்கு இருக்குமேயானால், அந்தப் பள்ளியை இந்த ஆண்டே தரமுயர்த்த பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ஆடலரசன் அவர்கள்.*

திரு. ப. ஆடலரசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய திருத்துறைப்பூண்டி பகுதியிலே ஆண்கள் மேல்நிலைப் பள்ளி இயங்கி வருகிறது. அதே* compound*–ல் பெண்கள் மேல்நிலைப் பள்ளியும் இயங்கி வருகிறது. ஒரே* compound*–ல் இரண்டு பள்ளிகளும் இயங்கி வருகின்றன. அதனால், பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்கென தனியாக, புதிதாகக் கட்டடங்கள் கட்டித்தந்து, அது தனி வளாகத்தில் இயங்குவதற்கு இந்த அரசு வழிவகை செய்ய முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல், கட்டிமேடு பகுதியில் இருக்கக்கூடிய பள்ளிக்குக் கூடுதல் கட்டடம் கட்டித் தர அரசு முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே* compound*–ல் பெண்கள் மேல்நிலைப் பள்ளியும், ஆண்கள் மேல்நிலைப் பள்ளியும் இயங்கி வருவதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இதை இரு கூறுகளாக மாற்றுவதற்கு இடம் இருக்குமேயானால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இடத்தைத் தேர்வு செய்து தருவாரேயானால், உடனடியாக இந்த ஆண்டே நபார்டு திட்டத்தில் அது இணைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 232, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பவுன்ராஜ், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*